ஸ்ரீ ரமண சிங்காரம்

மனவாசி வெ. ராமஸ்வாமி அய்யர்

SHAKTI PRESS LTD.
SHANTI PRESS
MADRAS

முகவுரை

நாரதர் சாண்டில்யர் நல்ல தெனப்போற்றும்
ஆரமுதன் பாற்சே ரருங்காதல்—ஆராயிற்
காத லரும்பலரச் சாதனமா ஞானமுமக்
காதலுக்கொப் பாமோ கழறு.

காதலா லூறுங் களியொன்று மில்லாக்கால்
வாதமய மேயாகு மாஞானம்—மேதினியில்
ஞானவுழைப் பின்பயனு நன்மலர்தாம் பூத்திடலால்
ஞான மலரன்று நாடு.

கள்ளமிலாக் காதலிற் காமவிருப் பேதுமிரா
தெள்ளளவு முள்ளேயா னென்பதிலே—தெள்ளியதண்
ணீர்ப்பரப்பை நோக்கி நிலத்து நதிகளெலாஞ்
சேர்வதியல் பென்றே தெளி. (௩)

சரபோசி சரஸ்வதி மஹால்
தஞ்சாவூர்.

சாண்டில்ய நாரத பக்தி ஸூத்ரங்களிலும் ஸ்ரீ பகவத்கீதையிலும் கடவுள் மேல் வைக்கும் காதலே ஞானத்திலும் உயர்ந்ததென நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. காதல் என்பது இதயம் மலர்ந்து வீசும் மகரந்தமாகும். இது இயற்கையாய் ஏற்படக்கூடியதே யொழிய ஞானத்தைப்போல் ஸாதனங்களாற் பெறக்கூடியதல்லவென்பது மேற்கூறிய நூல்களால் விவரமாகத் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது. உண்மைக்காதலுக்குக் காம வேட்கை முதலிய ஆபாஸங்களில்லை. கோபியரின் அனுபவமே நமக்கு உதாரணமாகும்.

இந்நூலின் விஷயமும் உண்மைக்காதலின் பெருமையையும் தூய்மையையும் உணர்த்துமென்று நம்புகிறேன். ஸ்ரீ பகவத் ரமண ஸந்நிதியில் இயற்றப்பட்ட நூலிதாதலால் இதற்கு விசேஷ மஹிமை யுண்டென்பதற்கு ஸந்தேகமில்லை. இதை இயற்றுங்கால் பேருதவி புரிந்த ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அய்யர் அவர்களுக்கு என்ன கைம்மாறு என்னாற் செய்ய வியலும்.

சென்னை,
1-2-40.

மனவாசி. வெ. ராமஸ்வாமி அய்யர்.

சிறப்புப்பாயிரம்

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அய்யர் இயற்றியது

நேரிசை வெண்பா

மனவாசி ராமன் மகிழ்ரமணன் மேலே
பனுமேக பத்திப் பனுவல்—அனுராகச்
சிங்கார ரூபமுறச் சித்திரித்துத் தானிழைத்த
வங்கார நல்லணியா வாழ்த்து.

சிறப்புப் பாயிரம்

(கிருஷ்ணராயபுரம் M. ரங்கனுதய்யர் இயற்றியது)

காதல் ரசம்பெறுமிக் காதல் வளநூலை
ஓத வுளத்தொளிரு முள்ளபொருள்—மேதினியில்
மன்னன் ரமணற்காய் மாண்பொடுமீண் டிங்குற்ற
கன்னியாங் கோபியிவர் காண்.

ஸ்ரீ ரமண ஸன்னிதி

ராகம்—ஆரபி] [தாளம்—ஆதி

பல்லவி

ஸன்னிதி காண வருவாய் ஸௌபாக்கியவதியே
சந்தோஷ மிக மிகவே (ஸன்னிதி)

அநுபல்லவி

என்னிதியும் தரும் இன்னலகற்றிடும்
மன்னன் ரமணனருள் மழைநின்று சொரிந்திடும்-(ஸன்னிதி)

சரணம்

ஏன் மனமே ஸுகமா வென்றிரு மாந்ததை
ஏளனம் செய்யலாகுமே
ஊன் உடல் நினைவில்லா மோனமாம் உணர்வொன்று
தானகத் தழைத்திடுமே
ஞாலங்க ளெல்லாமுய்யும் ஞான நதியதனில்
சீலமுடனே யாடி சிலாக்கியமாகியே
ஸ்ரீ ரமண சிங்காரம் பிரேமரஸம் ததும்ப
ஸ்ரீ ராமன் ஸதிபாடி க்ஷேமலாப மடைந்திடும்—(ஸன்னிதி)



பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்

ஸ்ரீ ரமண சிங்காரம்

அத்தியாயம் க

[தலைவி பாங்கியிடம் உரைத்தல்]

ஏற்கெனவே யேங்கிநெஞ்சம் புண்ணாகி யிடரடைந்தேன்
நூற்கச்சொல் லாராய நோகுமென்றன் சிற்றிதயம்
தோற்பையைத் தாங்குவதா யெணமின்னந் தொலைந்ததிலை
மேற்பதவி யெவ்விதநான் மேவுதலு மாகுமம்மா. க

மெத்தவுமே குற்றுயிராய் மெலிந்தவெனை முடித்திடவே
யித்திறமு மில்லையடி யெங்கள் ரமணனுக்கு
மெத்தமெத்த வித்தகனாய் மெச்சிடுவா யெப்போதும்
புத்தியெனப் பலர்மெச்சும் பூவையே புகல்வதென்ன. உ

காரணங்க ளிரண்டுண்டு கருணையிலை யென்பதற்கே
ஆரிவரா ரிவரென்றே யவன்சலுகை யடைந்தோரை
நேரிடவே நிற்பார்மேல் நேர்கருணை செய்வானே
ஆரிவளென் றேயொதுக்கி யகற்றலொரு வழியன்பே. ங

அன்றேலென் பிழைநோக்கி யகற்றிவிட்டான் மெய்வருந்தி
யென்றாகி லுந்திருந்தி வந்தாலே யியலுமென
நின்றானே யெனினன்று நன்றேதா னின்றனுரை
அன்றேதா னேனளித்தா னஞ்சேலென் றேருறுதி. ச

பெருநெருப்புக் கீரமிலை யெனப்பகரும் பேருலகம்
ஒருதரநீ யுள்நினைந்தா லுய்க்குமே யருணமலை
சுருதியுமே பொய்தானோ சூழ்கலியா மாயையோ
கருதியுமே யென்றன்பாற் கருணையுமே யிலையிலையே. ரு

பொன்னுடைச்சீ மாட்டிநீ பெரும்பேறே பொருந்தினையால்
அன்னவன்றா னுரைப்பதுபோ லதிசுளுவே யென்றிடுவாய்
மன்னவெனில் மலையதுவே மாபளுவாய் மனதிலுறச்
சொன்னதுதான் சுலபமதாய் விளங்கவில்லை யிளமயிலே. சு

சட்டிதான் சற்றோட்டை யாகிலுமே சுட்டுதவக்
கெட்டித் தனமாநீ கேலியுரை கிளத்துகிறாய்
மட்டித் தனமெனது மானுட்ப மதியுடையாய்
எட்டியெனைக் கைதூக்கி யேற்றுவியே யென்றோழி. எ

இடையிடையே தூதுபோ யிங்கிதமாய்ப் பரிந்துரைத்தல்
இடையழகிப் பாங்கிகளுக் கியல்பாகு மின்றைக்கே
நொடியில்நீ விரைந்தேகி நோவொன்றும் மதியாமல்
அடியேயென் னன்பனிட மடுத்துரைநீ யென்குறையே. அ

குணமொன்று மில்லையென்னி லவகுணமேற் கொண்டேனென்
பணமென்றா லணுவேது பாரினிலே மிகவேழை
மணங்கொண்ட மலர்தந்தால் மாலைக்குள் வாடுமென
மணமாலை யாமிப்பா மாலையான் றந்தேனே. கூ

குற்றங்கள் கும்பலுறக் கூடுமிந்தப் பாமாலை
உற்றதுவா மேனெனிலோ வுள்ளபடி யென்னிலையைக்
கற்றிடவே யாகுமன்றோ கசடியிவ ளென்றென்னைக்
குற்றமற முற்றிலுமே கூர்நோக்காற் கண்டிடவே. கo

—

அத்தியாயம் ௨

[பாங்கி தலைவனிடம் சென்று திரும்பிவந் துரைத்தல்]

புத்தியென மிகப்புகழ்வார் பூவுலகி லென்றனையே
இத்தினம்யா னிழிவடைந்தே னிதுவுமென்றன் விதிவசமே
தித்திக்கு நின்மொழியைத் தேறவே தெரியாது
முத்திக்கு நாதனிடம் முந்திட்டேன் மூடமதாய். க

முந்தியதா யவன்வாசல் முன்னியது மசைவற்றுச் [டேன்
சொந்தவுணர் வேதுமின்றிச் சோர்ந்தேபோய் நின்றுவிட்
எந்தவிட நோக்கினுமென் னெதிர்நின்றான் மாரமணன்
வந்தமர்ந்த யாவருந்தன் வடிவாகவேயொளிரும். ௨

இந்நிலையி லுன்குறையை யினிதுறவே யெடுத்தியம்பற்
கந்நியமா யாருமிலை யனைவருமே யவனானன்
அந்நிமிடம் யானுற்ற வையமிதை நோக்கியுடன்
சந்நிதியிற் சிறந்தொளிருஞ் சாந்தனிடஞ் சேர்ப்பித்தார். ௩

நீதந்த மாலையைப்போல் நிறைந்துளவே யவன்மார்பில்
ஏதிந்த வெளியனதை யேற்குவனோ வென்றேங்கும்
போதந்த மாலைதனைப் பூண்டுகொண்டான் பரிவுடனே
சூதந்தச் சுத்தனிடஞ் சிறிதுமிலை சொல்லிடவே. ௪

போதவிழ்ந்த பூமலர்போற் புன்முறுவல் யான்கண்டேன்
போதங்கொண் டுரைக்கவெனிற் புகன்றிடநா வெழவில்லை
வாதிறந்து வந்துற்றேன் மற்றேதுஞ் செய்கிலனால்
நீதுறந்து தள்ளாதே நேசமதை யெள்ளாதே. ௫

அத்தியாயம் ங

[தலைவி பாங்கிக் குரைத்தல்]

உண்மையைநீ யுரைத்தனையா லுனக்கிந்தா வுயர்மாலை
கண்மணியே யென்றோழி கள்ளமெது முன்னிலிலை
வண்மையுடை வல்லாளன் வகையெல்லாம் வெகுசூது
பெண்ணென்று லெண்ணமதிற் பேணுனே யெள்ளளவும். க

நினைந்துருகு மடியவரை நெக்குருக்கு நியமத்தான்
சினந்ததனற் பயனிலையச் சீமான்முன் யானேழை
மனந்தனிலே யிமையளவும் மறுகணவர் நினைவுமிலை
தினந்தினமு மவன்காதல் தீவிரமாய்த் தழைக்குதம்மா. உ

அவனுரோ நானுரோ வன்றன்பா மம்புவிட்டான்
சிவனுர்மே லாணையிட்டேன் சீவனையே கொண்டுவிட்டான்
தவமெல்லா மவன்நினைவே தானதத்துக் கென்னுளது
விவரித்தென் மர்மமதை விண்டுவிட்டே னுன்னிடத்தே. ங

கணவனென வவன்றன்னைக் கருத்ததனி லுன்னியுன்னிக்
கணமேனும் வேறில்லாக் காரணத்தால் மதிமயங்கி
யுணவேது முட்செல்லா துறக்கமுநான் மறந்துவிட்டேன்
தணலிலிடு மெழுகானேன் றையலே நம்புவையோ. ச

உற்றுரு முறவினரு முண்மையிதை யுணராரே
வற்ருத கண்ணீரும் வாய்குழறும் விதமுமெலாம்
நற்ருயு மெனக்கேதோ நலிவென்றே சொலுகின்ருள்
உற்ருய்நீ யுயர்மதியா லுகித்தா யுண்மையினை. ரு

யான்வரித்த கணவனைப்போல் யாரேனு மிங்குளரோ
தேன்சொரித்த மலர்போல்வான் றிருச்சுழியா னழகுமகன்
வேன்மறைத்து வேலவனே வேதியனு வந்துற்ருன்
ஏனுனக்குத் தினையளவு மிதிலைய முன்மனத்தே. ௬

இத்தனையு மொளியாம லேதேதோ பிதற்றிவிட்டேன்
அத்தினையிற் குறத்திமக ளவனன்பை யபகரித்தாள்
உத்தமியா ளத்திக்கோ வூடலுற வுற்றதுவே
பத்தினியாள் சித்தமதிற் பகைவருமோ பகர்வாயே. ௭

அபராத முறுமென்றே யச்சமிக வாகுதம்மா
உபகார மாமதுநீ யூரிலிதை யுளருயேல்
கபடமிலாக் கதிர்வேலன் கடைக்கண்ணி னேக்காகும்
சுபபலனை யானடையச் சுந்தரிநீ வழியுரையே. ௮

அயலவர்மே லன்புமிக வவனேக்குச் சென்றிடவே
புயலடிக்கப் பொருகடலே போற்பதைக்கு தென்னிதயம்
இயலதுவோ காதலுட னீரிஷையு மூண்டெரியும்
மயலில்யான் செயலற்று மாய்கின்றே னென்செய்வேன். ௯

வெள்ளமதில் வீழ்ந்தவர்க்கு வெறுந்துரும்பு மருந்துணையே
உள்ளமதி லுன்றனிலு முறுநண்ப ரொருவரிலை
கள்ளமிலாக் கருணைமிகு காரிகையே யுன்சொல்லைத்
தள்ளுகிலே னெள்ளளவுந் தாயுநீ தந்தையுமே. ௧0

2

அத்தியாயம் ச

[பாங்கி தலைவனிடம் சென்றுரைத்தல்]

முன்னொருகால் முன்னின்றேன் முறுவல்கண்டு சென்றுவிட்டேன்
அன்னநடை யென்றோழி யன்றுரைத்த வவையெல்லாம்
சொன்னபடி யானுரைக்கச் சொல்லெதுவு மெழவில்லை
இன்னமுதே யென்கோவே யிங்கிதமா யிவைகேளே. க

அன்றுன்ற னன்பான வருள்நோக்கா லவளிதயம்
சென்றதுதா னுனைவிட்டுச் சேர்ந்திலதா லவளிடத்தே
நின்றதவள் நிழலல்லால் நிர்ஜீவ னய்விட்டாள்
என்றுமவ ளுன்னினைவா லேங்கினளுன் மத்தையென. உ

வேறு

சொல்லடி நலிவு னக்கென் சோர்ந்துநீ வருந்து கின்றாய்
வில்லடி பட்ட புட்போல் விசையற்று வீழ்வ தென்ன
நல்லடி சிலுமே யுன்றன் னுவினிற் கசப்ப தேனோ
மல்லிடு மனக்கி லேசம் மறைப்பது மென்னி டத்தோ. ந

என்றுநற் றாயர் கேட்டா லேதுமே சொல்ல வில்லாள்
குன்றுபோ னிற்ப தல்லாற் குறைவெளி யிடவு மாட்டாள்
இன்றுயான் கண்ட போதே யீன்றவென் சேயைப் போலச்
சென்றுநீ யிறைவன் றன்பாற் செப்பென விரந்தாள் கெஞ்சி. ச

மெத்தவும் பயந்த செல்வி மெல்லியாள் பிணியை நீக்க
வித்தக னீயே யல்லால் வேறெவ ருதவ வுள்ளார்
சித்தத்திற் கனிவு கொண்டு சீக்கிரம் வாரா யாகில்
தித்திக்குந் தேனே போல்வாள் தீவிர முயிரே தீர்ப்பாள். ரு

அத்தியாயம் ரு

[தலைவன் பதிலுரைத்தல்]

உன்னுரை கேட்கக் கேட்க வுருகுதென் னெஞ்சம் மெய்யே
இன்னுயிர்ப் பாங்கி யென்மேல் யாதுதான் குறைநீ கண்டாய்
மன்னுயி ருய்ய வேதான் மௌனியா யிங்கு வந்தேன்
என்னுடை வேடத் துக்கே யேற்றவா றொழுகல் வேண்டும். க

கன்னிமே லாசை வைத்தான் கந்தனென் றுரைத்திட் டாலோ
சென்னிமேற் கரங்கள் கூப்பிச் செம்மையாய்ச் சிந்தி சைப்பார்
இந்நிய மத்தோ டேயா னிக்கன்னி தன்னை வேட்டாற்
பன்னியே பரிஹ ஸிப்பார் பாரினில் யாவர் தாமும். உ

பூவையோ பொங்கு செல்வப் பொன்னியாள் செய்ய பாதச்
சேவையே கோரி யுள்ள செல்வராம் யுவர்க ளேங்கத்
தேவையே துறந்து முற்றத் தீனனா யுற்ற வென்மேற்
பாவையேன் காதல் கொண்டாள் பண்புதா னிதுவே யாமோ. ௩

சுற்றந்தா னென்ன சொல்லுஞ் சுடச்சுட வம்ப ளக்கும்
நற்றாயுந் தந்தை தானு நாணுவா ரூர்வாய்க் கஞ்சி
குற்றமே யாகு முற்றுங் கூர்மதி யதனாற் றேறி
யுற்றதா மெதுவோ சொல்லி யூடலை மாற்றி டம்மா. ச

நற்குல மங்கை மார்கள் நாதனை வரிப்ப தானால்
பற்பல நீதி யுண்டு பந்துக்க ளொப்ப வேண்டும்
சற்குரு வாதி யோர்கள் சம்மதம் பெறலும் வேணடும்
அற்பமோ வதுவை யென்று லணங்கேது மறிகி லாளே. ரு

அத்தியாயம் ௬

[பாங்கி பதிலுரைத்தல்]

உள்ளத்தை யுள்ளபடி யுரைத்தனையா லதையென்றன்
உள்ளத்திற் கொண்டங்கே யுடன்சென்றென் னுயிர்த்தோழி
கள்ளமிலா வுள்ளத்தாள் கன்னியிட மேதுரைப்பேன்
எள்ளளவு மென்மதியி லேதும் விளங்கவில்லை. க

கன்னிமேற் பரிவுளதாய்க் கமழூமே யுன்றனுரை
பின்னுமே நோக்கினிலும் பிறிதுமொரு பொருள்தோன்றும்
எந்நியம முனக்குண்டா மேனென்னை யேய்த்திடுவாய்
உன்னையுந்தா னேசுகின்ற வுலகுண்டோ வுண்மையுரை. உ

ஆபத்திற் கிலைபாப மாவலுக் கில்லைவரை
தீபத்திற் கில்லையிருள் தீவிரமா யுற்றுப்பார்
தாபத்தாற் றவிக்குமிந்தத் தருணநீ கைவிடிலோ
பாபமே சூழ்ந்திடுந்தான் பாரமுழு தும்முனதே. ௩

வேறு

திங்களு மொளிவீ சுற்றுன் றீயதன் களங்கந் தன்னை
யெங்கணுங் கருது வானோ யேசுவார்க் கயர்வ னோதான்
சிங்கநீ செய்தா லொன்றைச் சீரிய ரேத்து வாரே
பங்கமில் பரம யோகி பயமுமோர் விந்தை யேதான். ச

கருணையின் கடலே யென்பார் காரிருள் நீக்க வந்த
அருணனே வந்தா னென்பா ராயினு மெனக்கென் னைகும்
அருணனி சுரந்தே யூறு மபயநீ யளித்தா லாச்சு
தருணியும் வருந்தி யேங்கத் தயவிலை யென்றே சொல்வேன். ரு

அத்தியாயம் எ

[பாங்கி தலைவியிட முரைத்தல்]

எவ்வித முரைப்ப தம்மா விம்முறை யிலுமே மாங்தேன்
செவ்விய சரணங் தன்னைச் சென்னிக்கு முடியாய்ச் சூடி
ஒவ்வொரு குறையாய்ச் சொல்லி யுன்னிலை தெளியச் செய்தேன்
இவ்விதச் சாக்கை யோட்டி யெளிதிலே மாற்றி விட்டான். க

முனிவனாய் வந்துற் றானும் முற்றுமே துறந்திட் டானும்
இனியுல கினிலே மாத ரின்பமே யறவிட் டானும்
தனியனாய்த் தரணி தன்னிற் றவமேதோ வியற்று வானும்
கனிமொழி யாளுக் குந்தான் கணவன்வே றிலையோ வென்றான்.

பற்பல நீதி சொன்னான் பாவைமே லிரக்கம் போலச்
சொற்பல பொழிதல் செய்தான் சொன்னத னுண்மை யீதே
சொற்பனங் காணல் வேண்டாஞ் சோகமுங் காதல் வேண்டாம்
விற்பனக் குமர ருள்ளார் வேண்டிடில் வரிக்க வென்றான். ங

கண்டன னவன்கண் ணேக்கு காதலாய்ப் பலர்மேற் றூவ
விண்டன வெல்லாஞ் சூதே விச்சகம் பேசி விட்டான்
கொண்டுள முனியின் வேடங் கோதையே யுனையே மாற்ற
பண்டுள வினைதா னேதோ பாக்கிய மடைவ தற்கே. ச

சுத்தமா மிதயத் தாளே சூதன்மேற் காதல் கொண்டாய்
நித்தமு மவன்நி னைவால் நிர்ஜீவ னாகி விட்டாய்
அத்தனை யருளி லான்பா லாதர நீயேன் வைத்தாய்
சித்தம துறவே தேறிச் சீக்கிரந் தெளிவா யம்மா. ரு

அத்தியாயம் அ

[தலைவி பாங்கிக் குரைத்தல்]

பாங்கிநீ சொன்ன வார்த்தை பாங்காகத் தோன்ற வில்லை
ஆங்கவ னுரையி லெல்லா மன்பொன்றே பொங்கி யூறும்
தீங்கெது நினைக்க கில்லான் றிவ்வியத் திருமா மேனி
ஏங்கினு மென்றன் ஹுவி லேதுமே வசைவா ராது. க

குவலய மதனி லுண்டு குமரர்தாம் பலபே ரென்றூன்
திவலையு மவரை நோக்கிற் றீரரா யொருவ ரில்லை
இவனினு முண்டோ சொல்வா யீங்கெவர் புருட ருள்ளார்
அவனியி லுள்ளோர் யாரு மாணல்ல பெண்ணே யன்றோ. உ

தகுமேவே றெவர்க்கு மேதான் றரணியிற் புருட ரென்னல்
புகுமோநற் சிங்கந் தோன்றப் புதர்களின் மற்ற வைகள்
ககனமேற் கதிரோன் மேவக் காணுமோ வுடுக்கள் தாமும்
மிகையாமோ வவனே யொற்றை மேன்மையா மொருவ னென்
றூல். ௩.

என்னுளே யுற்று நோக்கி யென்னுடைக் குற்ற மெல்லாம்
முன்னதா யகற்ற வேநான் முயல்வதே முக்ய மாகும்
அன்னவ னருளும் வேண்டு மல்லாக்கா லவற்றை நீக்க
என்றனு லாகா தம்மா வெத்தனை சொலினு மென்ன. ச

பித்தமு நீங்கி னலே பெண்கொடுப் பார்கள் பாரிற்
பித்தமு நீங்கு மோசொல் பெண்கொடா ராயி னம்மா
முத்தியுஞ் சாத்ய மாகும் முனிவர னேக்கொன் றுண்டேற்
சித்தபக் குவமே யன்றோ சிக்கென வவனைக் கூட்டும். ரு

உன்கண்ணுக் கென்னை நோக்கி லுயிரறு பிணம்போற் காணும்
என்கர்வம் முன்னைக் காட்டில் யானுமெவ் வளவோ குன்றி
அன்பினா லுருகி நீரா யாங்காரங் குறைந்து விட்டேன்
இந்நிலை யினிலே யென்ற னின்னலுங் குறைந்து காணும் ௬

அவனுக்கின் னருளுண் டானா லவனேவந் தணைய யாதும்
புவனத்திற் றடையு மில்லை பூரண மூர்த்தி தானும்
எவனுக்கா யஞ்சல் வேண்டு மேதுதா னியம முண்டு
கவனிக்கி லென்மாட் டுள்ள கள்ளமே யேது வாகும். ௭

குற்றங்க ளறவே போக்கக் கூர்வேல்போற் கடைநோக் குண்டு
குற்றுயிர்க் களையைப் போக்கக் குறைவில்கைத் தீக்ஷை யுண்டு
சற்றுமே காந்தத் திற்கோ சாரலிற் குகைதா னுண்டு
முற்றுமென் காத லார முறுவலு மொன்றே போதும். ௮

பதமதிற் றின்றா லன்றே பழமதின் பயனு மாகும்
பதமது நொந்து விட்டாற் பழமுந்தா னேதுக் காகும்
சதமல வாழ்க்கை யீது சகந்தனிற் சிலைபோ லாமோ
உததியை நோக்கி யோடு முறுநதி தடுப்பா ருண்டோ. ௯

இருமுறை சென்று வந்தா யின்னுயிர்ப் பாங்கி யேநீ
அருமையா யென்னைக் காக்க வதுவேகங் கணமாய்ப் பூண்டாய்
ஒருமுறை யெனக்கா யின்ன மோடிப்போ யவனைக் கண்டு
திருவடி தன்னி லென்றன் ஸ்திதிதனை யுரைநீ யம்மா. ௧௦

அத்தியாயம் கூ

[பாங்கி யுரைத்தல்]

இன்னுயிர்த் தோழி நீயே னிங்ஙனஞ் சங்கை கொண்டாய்
என்னுயிர் போயி னுந்தா னினிதுனக் கியற்ற லொன்றே
என்னது நியம மாகு மெனக்குப சார மேன்சொல்
சொன்னவா றியற்று வேனுன் சோகமே தவிர்வா யம்மா. க

கொஞ்சமு மன்பி லானைக் கோதையே நம்பு கின்றாய்
தஞ்சமென் றடைந்த பேர்தாந் தரணியிற் கோடி யுண்டு
மிஞ்சியே கொல்வ தல்லால் வீசமு மீர மில்லான்
எஞ்சியே தானாய் நிற்க வேதுமே செய்தற் கஞ்சான். உ

மணந்துனை மனிதர் போல மகிழ்வதோர் காலு மில்லை
அணைந்திட வரிதா மஃதோ ராகாசக் கோட்டை யாகும்
அணங்குநீ செல்லச் செல்ல வாருயி ரதுவுஞ் செல்லும்
பிணந்தனை யொத்து நிற்பாய் பிறிதுமே பலனு மில்லை. ங

தன்னையே தவிர்த்து வேறு தரணியில் வைக்க வெண்ணான்
பின்னையோ சொல்லுக் கேனும் பிறிதொன் றுண் டெனச்சொன்
அன்னையே யானு லுந்தா னழிந்திட வழுக்கி வைப்பான் [னாலோ
நன்னய மொழிக ளெல்லா நானேது நம்பே னம்மா. ச

ஒருமுறை தானே யல்ல வுன்னுளங் குளிர முற்றும்
பெருமையாய்ப் போற்று வேனுன் பினும்பினுந் தூது செல்ல
இருமையே யறவொ ழிக்கு மிறைவன்பால் யானுஞ் செல்வேன்
அரியவென் னுயிரை யன்னா னகற்றிடி னதுவு நன்றே. ரு

அத்தியாயம் கo

[பாங்கி தலைவனிடம் உரைத்தல்]

முனிவரர்க் கரசே போற்றி மோகமே தவிர்த்து நின்றாய்
பனிமலர் பலவுங் கொண்டுன் பாதநான் பரவி யுற்றேன்
இனியொரு முறையென் சொல்லை யிசைந்துநீ கேட்பா யாக
தனியளாய்த் தவிக்கு மென்றன் றையன்மீ தருள்செய் வாயே. க

பிறந்தநாண் முதலாய் மெத்தப் பித்துன்மேல் வைத்தா ளன்றே
திறந்துள செல்வ மெல்லாந் திரஸ்காரஞ் செய்த மங்கை
சிறந்துள பருவத் தேயுஞ் சிந்தையுன் மீதே யன்றி
மறந்துனை விட்ட நேரம் மனதினி லென்று மில்லை. உ

கனிந்தநற் கனியை நாடிக் கடிதினி லேற்பா யாகில்
தினந்தின மவளை யன்றித் தெய்வவா னமுதுங் கோராய்
வனந்தனிற் கொள்ளை கொண்ட வள்ளியு மறந்து போவாய்
மனந்தனிற் சற்று நீதான் மணந்திட வுவந்து வாராய். ங

கண்ணனு மந்நாள் தன்னிற் கயவனுஞ் சிசுபா லன்றன்
கண்ணியிற் படாம லன்பாய்க் கன்னிருக் மணியைக் காத்தான்
எண்ணுள வஞ்சம் வல்லா ரேய்க்குமுன் னிவளை யேற்பாய்
புண்ணிய புருட னீயே புகழ்பூத தயைமிக் கோனே. ச

இனியுநா னென்ன சொல்வே னின்னல்வாய்ப் பட்டாள் தன்னை
இனியுநீ பராக்கில் லாம லிப்பொழு தேன்று கொள்வாய்
பனியைநீள் பரிதி போலப் பகைவரைப் பறக்க டித்துக்
கனியுமார் கனியை முற்றுங் கடிதினி லுனதே யாக்கு. ரு

அத்தியாயம் கக

[தலைவன் பாங்கிக் குரைத்தல்]

இதுவுமென் விதியே தானே யிவ்வுல கினிலே னுற்றேன்
பொதுநல மிழைப்ப தென்றாற் போதுமே பெருநிட் டூரம்
பதுமைபோ லிருந்தா லுந்தான் பாரினர் முனியோ வென்பார்
மதுவினை மொய்க்கு மீப்போல் மானிடர் கூடு கின்றார். க

கடுமையா யென்றன் னுவிற் கைப்புறு மொழிதோன் றாது
கொடுமைவா யகப்பட் டோரைக் கோபிக்குங் குணமெற் கில்லை
சுடுமொழி களினு லென்னைச் சுகங்கெடச் சுழற்று கின்றாய்
முடியுமோ யார்க்கு மம்மா முதுநெறி பிறழ்த லென்றால். உ

அவரவர் மனம்போற் காணு மவனியி லென்னை யுற்றார்
பவமொழி வைத்ய னென்பார் பாவனு தீத னென்பார்
சிவனருள் குமர னென்பார் சேசுவு நபியு மென்பார்
எவரெது சொன்னு லென்ன வென்சுமை யெனதே பாரம். ந.

பருவம தடைந்த பாவை பைத்திய மென்மேற் கொண்டாள்
ஒருவரு மிந்த வண்ண மொருபிடி பிடித்த தில்லை
அருங்குணம் வாய்த்த வட்கின் றூறுதல் செய்யா விட்டாற்
பெருங்குறை யெனதே யாகும் பேயனென் றுலகும் பேசும். ச

சொல்வதை நம்பு வாயோ சூதென்றே சங்கிப் பாயோ
பல்விதஞ் சொல்லி யென்ன பாவையை யேற்றுக் கொள்வேன்
நல்வித மவளைக் கூட்டி நாலுபே ரறிய வின்று
மல்குமங் களத்தோ டுற்ற மாங்கல்ய மவட்க ளிப்பேன். ரு

அத்தியாயம் கஉ

[பாங்கி பதிலுரைத்தல்]

இன்றலோ வுன்னைக் கண்ட வினையிலாத் தவப்பே றுற்றேன்
சென்றதே யவளைக் கொண்டு செப்பிய விடமே சேர்வேன்
நன்றதே நல்ல திக்கில் நற்பல்லி சொல்லுங் கண்டேன்
தென்றலு மிதமாய் வீசுந் தெய்வசம் மதமு மீதே. க

சொன்னசொற் றவறு தேநீ சுத்தனே சிவகு மாரா
வன்னமா மயின்மீ தேறி வருவையே லெங்கட் காக
அன்னமா நடையாள் நோக்கியானந்த பரவ சத்திற்
றன்னித யத்தின் காதற் றண்ணீரா லாட்டு விப்பாள். உ

சொக்கிநெக் குருகி மாழ்கிச் சோகமே லிட்டுச் சோர்ந்து
விக்கியே தழுத ழுப்பாள் விரைவிலே யவளைத் தேற்று
சிக்கியே கொண்டா ளென்று சிரத்தையிற் குறைசெய் யாதே
முக்கிய மன்னு ளாவி முன்னதாய்ப் போற்று வாயே. ந

மெல்லியாள் வெகுநா ளாக மெலிந்தன ளுன்னி னைவால்
நல்லுரை தனையே யாடு நைந்திடு நெஞ்சைத் தேற்று
மல்லிகை முல்லை கோத்த மாலையை யவட்குச் சூட்டு
சொல்லுவ தழகே யாமோ சுகமதை விரும்பிச் செய்வாய். ச

சொல்லிய வுறுதி யாகுஞ் சொற்படி வாரா யாகில்
மெல்லியா ளுயிர்தான் சொன்னேன் மேலுல கேகுந் திண்ணம்
மொல்லென வுன்னைச் சூழ்ந்து மொய்க்குமுன் னடிய ராவோர்
கொல்லென நகைக்கக் கேலிக் கூத்தாக முடியு நின்சீர். ரு

அத்தியாயம் கங

[தலைவியிடம் பாங்கி யுரைத்தல்]

கண்மணி யென்றன் றோழி கடவுளாம் ரமண னெங்கும்
ஒண்மணி யின்று தானே யொளிர்ந்திடு சுடரும் வீசிப்
பெண்மணி யுன்னை யாளப் பேரருள் விழைவுங் கொண்டிங்
குண்மணி யெதிரில் வந்துன் னுள்ளமு முடிப்பா னம்மா. க

குறைவினி யேது மெண்ணுய் குதூகல நெஞ்சிற் கொள்வாய்
இறைவனே நேரிற் றோன்றி யிங்கித முனக்குச் செய்வான்
மறையருள் வேள்வி யோடு மணந்துதா னுன்றன் மீதில்
நிறைவிழை வோடுங் கூடி நீடூழி வாழ்வ ருள்வான். உ

இனிதுற நன்னீ ராடி யின்பமா யுணவு கொள்வாய்
பனிமலர் பலவுஞ் சூடிப் பாங்குட னுடை பூண்பாய்
கனிவகை களிப்போ டேந்திக் கணவனுக் கீந்து நாளும்
நனியுப சார மெல்லா நன்குநீ செய்வா யம்மா. ங

கொழுநனுக் கடங்கல் வேண்டுங் கோபநீ மாற்றல் வேண்டும்
எழுமனு ராக மொன்றே யென்றைக்கும் போற்றல் வேண்டும்
வழுவிலா வில்ல றத்தில் வாழ்ந்துநீ யெந்த நாளுந்
தழுவியே யறநான் காகுந் தவப்பய னடைவா யம்மா. ச

கற்றிடு வித்தை யாதுங் காதலுக் கியாது செய்யும்
மற்றெவர் மதிபோ தித்தும் மனந்தனி னிலைத்த லேது
நற்றவ நல்கும் பேறே நாதனு வருவ தாலே
கொற்றவ னவனே யென்று கொண்டுநன் னிலையி னிற்பாய். ரு

அத்தியாயம் கச

[தலைவி யுரைத்தல்]

பாங்கிநீ சொல்வ தெல்லாம் பரிவுட னேற்றுக் கொண்டேன்
தீங்கெனக் கினிமே லில்லை தெய்வமு முளதென் பங்கில்
ஆங்குநீ சென்ற பின்ன ரசரீரி யொன்று தோன்றி
ஓங்கிட வொன்று சொல்லி யொளிந்ததீ ததிச யந்தான். க

உன்வர வொன்றே நோக்கி யுள்ளவென் னுள்ளத் துள்ளே
உன்னைநீ யாவ ளென்ன வுசாவென வுறுத்தி மெய்யாய்ச்
சொன்னசொல் லின்ன மென்னுட் சோதியாய்த் துலங்க லாலே
என்னுளே யென்று மில்லா வேக்கமொன் றுற்ற தம்மா. உ

என்னைநீ ராடச் சொன்ன யென்னை!யிவ் வுடலே நானே
பின்னையோ பணிகள் பூணல் பேயுட லன்றோ கூறு
முன்னைநா னெனுஞ்சொற் றூங்கும் மூட்டைதான் முதுகா டேகும்
இன்னலே யியற்கை யாகு மிதுவேநா னுகை மாட்டேன். ங

இந்தமெய் யலநா னென்று லிறைவனை யணையத் தானும்
சொந்தமா யுடலு முண்டோ சுகந்தனை யடைவ தற்குக்
கந்தன மயின்மீ தேறிக் கடிதினில் வருவ தெல்லாம்
விந்தையாய்த் தோன்று மாய வெளிவேடந் தானே யன்றோ. ச

வேறு

துன்பங்க ளிந்நாளாய்த் துன்னுகா தற்பிணியால்
என்பங்கே யானதுவு மேனின்னம் போதாதோ
தன்பங்குக் கிங்குற்ற தத்துவத்தின் றயக்கத்தாற்
றென்பங்குக் கேகுவது தெள்ளெனவே தோன்றுதடி. ரு

வேறு

உடலைநா னல்ல வென்றே யூசியாற் குத்திப் பார்த்தேன்
உடனந்த வுடலின் றுன்ப முற்றென்னை வருத்திற் றன்றே
உடலது நானன் றென்று லுற்றதே னெனக்குச் சொல்வாய்
உடலைவிட் டிங்கு நானு முள்ளவா றறிகி லேனே. ௬

வேறு

தனியொன்று நானுண்டேற் றனுவினக மோபுறமோ
தனுவினுக் குறுதுன்பந் தானேது மடையாமல்
இனிமையுள நிலையுளதோ வீங்கெவ்வா றதையடைவேன்
எனையறிய வெளியவழி யியம்புவதற் கெவருள்ளார். ௭

உண்டுடுத்திங் குலவுகின்றே னுறங்குகின்றேன் மறந்துடலை
கண்டுமுளேன் காட்சியெலாங் கனவினிலு நனவினிற்போற்
பண்டுபண்டு பார்த்ததெலாம் படம்படமா யாடுமக்காற்
கண்விழித்துப் பார்த்திடிலோ காணவில்லை யவையெல்லாம். ௮

என்னையறிந் திடவேண்டு மையமெலா மேகியபின்
என்னிறைவன் மேற்காத லென்னிதயத் துறவேண்டும்
அன்னவன்ற னன்பெல்லா மையோ!விவ் வுடலிற்கோ
என்னவதி சயமிதுபா ரேந்திழையே யறியேனே. ௯

ஒன்றுமே விளங்கவில்லை யொருதரநீ யோடிப்போய்
என்றனுடை மனத்துற்ற வேக்கமெலா மெடுத்துரைப்பாய்
நன்றுடைய வவனுரையை நான்கொண்ட பின்னன்றிச்
சென்றுணவுட் கொளமாட்டேன் சேக்கையுந்தான் விரும்பேனே.

அத்தியாயம் கரு

[பாங்கி தலைவனிடம் உரைத்தல்]

அற்புதமாய் விளங்குமென தாண்டவனே யழகுடையாய்
பொற்பதத்திற் பணிந்தேனன் புகலுரையைச் செவியுறுவாய்
கற்பகத்தின் கனிச்சுவையே காரிகைதான் மதிகலங்கி
நற்பதத்தை நழுவவிட்டாள் நாநாவாய்ப் பிதற்றுகின்றாள். க

உன்னையணை யுஞ்சுகத்தை யுடலுக்கே யீயாளாம்
இன்னலுறு மிவ்வுடல மிவளல்ல வென்கின்றாள்
முன்னமதாய்த் தன்னிலையை மும்முரமாய்த் தேடுகின்றாள்
தன்னையறிந் துணர்ந்தபின்பே தானுன்னை யணைவாளாம். உ

அத்திரமா மிவ்வுடற்கே னதிகவுப சாரமென்பாள்
பத்திரமாய்க் காத்தாலும் பாழுடல்நில் லாதென்பாள்
இத்தனுவாய் நீயுற்ற வீதெல்லாம் வேடமென்பாள்
அத்தனே யுனதுண்மை யறியவெனை யனுப்பிவைத்தாள். ந

உடலற்ற வுண்மையவட் குவந்தருளத் தான்வேண்டும்
திடமுற்ற வவ்வுருவாற் றேவியைச்சேர்ந் திடவேண்டும்
மடமுற்று மாமதிபோய் மயங்கிநா னிங்குற்றேன்
இடமற்ற வென்னையுந்தா னிசைந்துநீ யாட்கொள்வாய். ச

வேறு

உயர்மதி யென்றே யென்னை யுலகினர் புகழ்ந்து மென்ன
உயர்வுற்று மிகவு கித்து முளதொன் றும் விளங்க வில்லை
அயர்வுற்றென் னுக மெல்லா மணைந்ததே யுன்றன் முன்னே
மயலுற்ற வென்ன லுன்னை மதிப்பதும் மடமை யேதான். ரு

அத்தியாயம் கசு

[தலைவன் பாங்கிக் குரைத்தல்]

பிள்ளையார் பிடிக்க வுற்றுப் பெருங்குரங் கானாற் போலக்
கிள்ளையாள் காத லெல்லாங் கிள்ளைகா விலவே போலும்
வெள்ளையாய்ப் போச்சு தன்றோ விருப்பவட் கென்மே லின்மை
எள்ளலாய் முடிந்த தன்றோ வென்பிழைப் புன்றன் றாதால். க

முந்தியே யென்னைநீ யுற்று மோகத்தின் மூழ்க வைத்தாய்
பந்தமே யில்லா வென்னைப் பாசத்திற் பற்று வித்தாய்
சுந்தரி மார்பிற் சூட்டச் சொகுசான மாலை கொண்டேன்
அந்தமா யவளுக் கேற்ற வணிகல மெல்லாம் வீணே. உ

சென்றதை நினைந்து நொந்து செய்வதை யொன்றுங் காணோம்
இன்றவட் குற்ற பித்த மீங்கெவர் தீர்க்க வல்லார்
துன்றுமித் தீய தேகந் துளியேனு நானன் றூமேல்
அன்றவ ளேன்கா முற்றூ ளழியுமிவ் வுடல மீதே. ௩

அன்புதா னென்றன் மீதி லவள்மிக வைத்த தாலே
முன்புநான் சொன்ன வண்ணம் முழுமன மவள்மேல் வைத்தேன்
பின்புநா னவளை யென்றும் பிரிவுற்று மறக்க மாட்டேன்
இன்புற வவளெந் நாளு மீடேறி நீடு வாழி. ச

அவளவள் தனையா ராய வயலவ ரென்ன சொல்வார்
கவலைகொண் டுள்ளே சென்று கருத்துட னோக்கல் வேண்டும்
திவலையும் வெளிவ ராது தீவிர விசாரம் வேண்டும்
நவிலவே யாகா தென்று நங்கைக்கீ துரைப்பா யம்மா. ரு

அத்தியாயம் கஎ

[பாங்கி தலைவிக் குரைத்தல்]

விபரீத மாயிற் றிங்கு விழைவுடன் றூது சென்றும்
சுபக்குறி சகுன மெல்லாஞ் சுத்தப்பொய் சுத்தப் பொய்யே
தபித்திடுங் காதல் நோய்க்குத் தக்கதோர் மருந்து தேடி
லபித்திடும் வேளை தன்னில் லாபமே யிழக்க லானுய். க

அன்னவற் கடங்காக் கோப மழைத்துன்னை வருவே னென்று
சொன்னசொற் றவற லாலே சுகமெல்லா மிழந்தே னென்றான்
வன்னப்பூ மாலை வாங்கி வைத்ததும் வீணே யென்றான்
சொன்னநற் பூஷ ணங்கள் சூடலு மெப்போ தென்றான். உ

என்றாலு முன்றன் மேலன் பென்றைக்கும் மாறா தென்றான்
இன்றல்ல வென்றா லுமிசைந்துநீ வந்தா லாகும்
என்றந்தப் பணிக ளெல்லா மெடுத்துளே வைத்துக் கொண்டான்
நன்றந்தக் காலந் தானே நண்ணுமா றெண்ணி யுள்ளான். ங

உன்னைநீ யறிந்தி டத்தா னுனக்கேனோ வுதவி யென்றான்
பின்னையோர் பொருளைக் காணப் பெரியதோர் விளக்கு வேண்டும்
உன்னைநீ காண்ப தற்கிங் குன்னையே யுன்ன லல்லால்
என்னுள தியம்பு தற்கு யாதுரைத் திடினு மென்ன. ச

வேறு

பார்க்கின்றாய் கேட்கின்றாய் பார்ப்பதுவுங் கேட்பதுவும்
ஆர்க்கிதுவென் றாராய்ந்தா லகப்படுமுன் னுண்மையென்றான்
நேர்ந்திடுமவ் வுண்மைதனை நீவிரைவி லறிந்துகொண்டு
சேர்ந்திடவே வருவழியைச் சிரத்தையுடன் கோருகின்றான். ரு

அத்தியாயம் கஅ

[தலைவி பாங்கிக் குரைத்தல்]

பாங்கிநீ சொலுஞ்சொல் லாலே பயனெனக் கேதுங் காணேன்
ஏங்கிநான் கலங்கு மிப்போ தேதாவ துறுதி யொன்று
வாங்கியே வருவா யென்று வாயிலிற் காத்தி ருந்தேன்
தூங்கியே விழுவார் போலத் துப்பின்றித் திரும்பி வந்தாய். க

என்னைநா னுன்னும் வித்தை யெளிதாக விருக்கு மானல்
உன்னையே னனுப்பி வைத்தே னுன்மத்த மெனக்கு முண்டோ
என்னைநா னிதுதா னென்ன வெழுப்பியே யுண்மை காட்ட
அன்னவ னதிச மர்த்த னவனியும் புகழ்ந் துரைக்கும். உ

பாங்கிதா னென்றே யுன்னைப் பரிஹஸித் தேய்த்து விட்டான்
ஈங்கிருந் துனைவ ருத்தி யிதுவேநான் கண்ட பேறும்
ஓங்கிசை செல்வ ஞான மொளிர்கின்ற பொக்கி ஷத்தில்
வாங்கியே வரவு னக்கு வளஞ்சிறி தில்லை யன்றோ. ந

வேறு

உடல்முழுது நானுகை வுறுத்துகின்ற தென்னுணர்வு
கடலதனி லோர்பாகங் கடலல்ல வென்பாரோ
சடலத்துள் நோக்கவெனிற் சாருமிடந் தானேது
நடலந்தா னவனுரைகள் நலமேது மிலையிலையே. ச

வேறு

எதனையு முன்னிப் பார்க்க வெனைவிட யாரே யுள்ளார்
புதிதென வுளது யாது புதைத்துள பெருந்த னம்போல்
நிதமுநா னுறங்கிப் போகு நேரம தனிலுங் கூடத்
திதமுறு முணர்ச்சி யாகுந் திரிபிலா வொன்று யுள்ளேன். ரு

இதனல்நான் தெரிந்து கொண்ட விதமது வொன்றே யுண்டு
கதமாய்த்தா னுடல்செத் தாலுங் கரியாய்நா னிருப்பே னல்லாற்
கதமுமா கதமு மில்லாக் ககனம்போல் நிலைத்தி ருக்குந்
திதியொன்றே யுள்ள தாகத் தீர்மான மாய்த்தெ ரிந்தேன். சு

ஆயினு மோர்சந் தேக மாராய முடிய வில்லை
தோயங்கள் பலவா னலுந் தோயமென் றிடவ டங்கும்
தேயங்கள் பலவா னலுந் தேயமென் றிடவ டங்கும்
ஆயுமிங் கெனக்குந் தானே யகண்டமா மறிவொன் றுண்டோ. எ

கண்டமா மறிவா நானுங் கண்டமி லறிவி னின்று
கொண்டதோர் தனியு டம்பு கோரியே வந்துற் றேன
அண்டத்து ளனைவ ரென்றே யழைத்திடு பெயர்கொண் டாரும்
பிண்டமா முடம்பு கொண்டு பிறிதுற வென்ன ஞாயம். அ

பிறிதேயுற் ரூலு மென்ன பேதமேன் காண வேண்டும்
சிறிதேயு மென்னு ணர்விற் சிற்கன வுணர்வே யில்லை
அறிவுற்ற வென்ற லுண்மை யகண்டத்தி னின்று வேரு
யறுபட்டு நிற்ப தேனே வறிவிப்பா ரிதனை யாரே. கூ

வேறு

மறுமுறையு மெனக்காக மாண்புடனே தூதாகி
உறுமிந்த வுட்கலக்க மோடிடவோ ருபதேசம்
பெறுவரையி லவனைவிட்டுப் பெயராது கடைப்பிடித்துச்
சிறுமிக்கோ ராறுதலாய்ச் சீக்கிரநீ திரும்புவையே. க0

அத்தியாயம் கக

[பாங்கி தலைவனிடம் உரைத்தல்]

என்னசொல்வே னென்பாக்ய மெத்தவத்தி னற்பயனோ
பின்னுமுனைப் பேணிடவே பெருமையுற்றுப் பூரித்தேன்
மின்னிடையா ளென்றோழி மிகமிகவே சங்கையடைந்
துன்னுரையே யூக்கமதா யுணர்ந்துவர வனுப்பிவைத்தாள். க

உன்னருளா லவளுருவை யுள்ளங்கைக் கனியைவிடப்
பின்னையுமே சுளுவாகப் பெறலாகு முறுதியுடன்
உன்னலற வதைவிளக்க வுனிற்றீர ருலகினிலே
இன்னொருவ ரிலையென்றே யிவளுன்னை யறிந்துகொண்டாள். உ

நயவஞ்ச மொழிகளினல் நகைத்தென்னை யகற்றிடினும்
தயவுந்தான் கொண்டென்னைத் தாங்கியே தூக்கிடினும்
வயதுந்தா னுனது மெனக்கெதுவும் வசமாமோ
உயவுன்ற னருளொன்றே யுகந்திடுவே னுணையிது. ங

வந்துனையான் றரிசிக்க வாடுமென்ற னவகுணங்கள்
சிந்தையுமே படிப்படியாய்ச் சிதைவுற்றே யிளகினது
தொந்தரைசெய் தாளென்று தோஷமென்மேற் சுமத்தாதே ச
எந்தவித மாகிலுநின் னெதிரிலிருந் தாற்போதும்.

வேறு

காதலே சற்று மில்லாக் கசடிக்கிவ் விதமே யானற்
காதலே யுயிரா யுள்ள கன்னியின் னிலையைத் தானே
ஓதலே யஸாத்ய மாகு முன்னினை வதனு லேதான்
சாதலே கோரு கின்றாள் சகலவின் பதுவே யென்றாள். ரு

அத்தியாயம் ௨0

[தலைவன் பாங்கிக் குரைத்தல்]

இந்நாளா யெனைவைதா யிதுவுந்தான் போதாதோ
இன்னமெனை வஞ்சனென்னு மிப்பெயருந் தந்திட்டாய்
என்னகுறை யெனிற்கண்டுன் னிஷ்டம்போ லேசுகிறாய்
சின்னவளி னன்புக்காய்ச் சீற்றமிலா தவைபொறுத்தேன். க

வேறு

அன்றைக்கே சொன்னே னன்றோ வன்பவள் மேல்வைத்
தென்றைக்கா யினுமே மாறா வியல்புசே ரந்த வன்பை [தேனென்
நன்றேதா னளவிட் டோர்ந்து நவில்வதென் னாலே யாமோ
இன்றேதா னந்த வன்புக் கிடத்தினா லேயும் பேதம். ௨

வேறு

அகண்டமே தானன்றோ வவளுடைய வுண்மையுரு
அகண்டமா யவளிருக்க வனுபவந்தான் வேறுளதோ
நகைப்பரன்றே நாள்நாளு நான்மனித னென்றெண்ணின்
திகைப்பன்றோ வுண்டாகுந் திக்பிரமை யுற்றோர்க்கே. ௩

தன்னையேன் றனிமையுள தையலென நினைக்கின்றாள்
பின்னையுந்தா னேதுக்கோ பிறிதுள்ள நினைவெல்லாம்
உன்னலுந்தா னென்றுண்டோ வுள்ளபடி தானிருக்க
என்னையுள தறிந்திடத்தா னேதுதன்னில் வேறுளது. ௪

வேறு

மதுதனை யருந்தி னோர்க்கு மயக்கமே தீரு மட்டும்
இதுவேதோ வென்னு மேக்க மியல்பேயா மென்ன விந்தை
இதுவேதா னென்றே யோத வேதுமே யிலையெந் நாளும்
பொதுவாந்தன் னிலையி னுண்மை போக்கினுந் தான்போ காதே. ரு

தனியாய்நா னுள்ளே னென்னுந் தபித்திடு நினைவை
யோட்டித்
தினையுமே நினைவு தோன்றாத் திடமதைத் தேடச் சொல்வாய்
நினைவதே யோய்ந்து போக நிஜவுணர் வொன்று திக்கும்
சுனையினீர் சுரத்தல் போலச் சோகத்தைத் தவிர்க்குங்
கண்டாய். ௬

அத்தியாயம் உக

[பாங்கி தலைவிக் குரைத்தல்]

பூவொடு நாருஞ் சேர்ந்து புனிதமாம் பொருளே போலப்
பூவையே யுன்ஸக் யத்தாற் பூரண னருட்சீர் பூண்டேன்
நாவினு னவில வொண்ணு நல்லன்புன் மேலே லவைத்தான்
ஏவினு னுன்னைத் தேற்ற வினிதுறு மொழிகள் சொல்லி. க

மயக்கமே னுற்ரு ளென்ருன் மதுவருந் தினளோ வென்ருன்
தியக்கமாய் மனிதன் ருனுந் தினமெண்ணுன் மனித னென்று
முயற்கொம்பை யுலக முற்றும் மும்முர மாய்த்தே டல்போல்
வியர்த்தமாய் வெறுநி னைவால் வீணுய்நாள் போக்க லாமோ. உ

நினைவுதான் யாவ ருக்கும் நீசமா மயக்க மாகும்
தினையுமே நினைவெ ழாது திடமாக விருக்கச் சொன்னுன்
எனையுள ததற்கு மேலே யியம்பவொன் றிலையே யென்ருன்
தனையறிந் திடத்தான் ருனுய்த் தரித்தலின் வழியே தென்ருன். ங

அவர்சொன்னு ரிவர்சொன் னுரென் றவட்கேன்வை ராக்ய மென்
சுவர்தன்னிற் சித்தி ரம்போற் சுத்தமா முன்னி டத்தில் [ருன்
விவரமில் நினைவொன் றற்று மேல்வரைந் தழிப்ப தாகும்
இவரெவ ரெனவுட் பார்க்கி லிவையெல்லா மெங்கோ காணும். ச

கவலையே யுனக்கு வேண்டாங் கடவுளி னருள்நீ மிக்காய்
திவலையு நினைவெ ழாது திடமாயுன் நிலையி னிற்பாய்
அவலமா மந்நி னைவே யகங்கார மனம தாகும்
விவரமா யுரைத்தே னம்மா விசிராந்தி யுடனே வாழ்வாய். ரு

அத்தியாயம் உஉ

[தலைவி யுரைத்தல்]

போதுமடி போது நீதான் போதிக்கு நீதி யெல்லாம்
ஓதுவதற் கெண்ணி னலோ வுலகிற்பன் னூல்க ளுண்டு
கோதுகளை யகற்றி லன்றோ குணங்களை யடைய லாகும்
வாதனைகள் செய்யு மிந்த வன்றுன்புக் கென்ன செய்வேன். க

வேறு

அருளொன்றே யுண்டான லதுசாலும் மேலெதற்கும்
மருளதனைப் போக்கவெனின் மருந்ததுவே வேறில்லை
இருளதனை நீக்கிடவே யிலகுமொளி யொன் றுண்டேற்
பொருளதனை ஸ்பஷ்டமதாய்ப் போதத்தோ டுணர்ந்திடலாம். உ

நினைவதனை நீக்கென்ருய் நிலைத்ததனைத் தடுக்கவெனில்
முனையுமுன்னே காரிருளும் மூடுதடி யுறக்கம்போற்
பினையதனைப் போக்கலெங்ஙன் பின்பென்னை யறிதலெங்ஙன்
தினையளவு மூன் றா தாற் றெரியவந்த தேதுமிலை. ந

சாத்தியமோ வங்கெனக்குச் சரியைகிரி யாதிகளும்
பூத்திடுமோ பலங்காட்டிற் பொலிவுறவே பூவரும்பும்
ராத்திரியும் பகலினுமாய் ரமணனிஜ வுருவணையக்
காத்திருக்கு மென்றனக்கிக் கதையெல்லா மேதுபயன். ச

வேறு

யோகங்கள் பயில மாட்டேன் யூகித்த தெல்லாம் போதும்
சோகத்தான் மெலிவ டைந்தேன் சோர்ந்துளநா னென்ன செய்
தாகத்தைத் தணிக்க நல்ல தடாகந்தா னருகி ருக்க [வேன்
மோகத்தை யேனே கொள்வேன் மொண்டதனைப் பருகி டாதே.

பலபல சொல்வ தெல்லாம் பைத்திய மொழிக ளேயாம்
கலகல கண்ணீ ராலே காரிய மெதுவுங் காணேம்
சிலநல மொழிகள் சொல்லிச் சீராக வுன்னை யேய்த்தான்
சிலைமலை யதுவே போலச் செயலற்று விளங்கு கின்ருன். சூ

வேறு

என்றன்மேற் செயுமன்பிற் கிடபேத மிலையென்ருற்
றுன்பங்கள் தோன்றுதின்னுந் துரிசுகளே னகலவில்லை
என்சிந்தை செயுங்கொடுமை யேனின்ன மடங்கவிலை
பின்பென்மேல் வைத்துள்ள பிரேமையதன் பயனென்னே. எ

காதலே யென்சு பாவங் காதலே யென்றன் னுவி
காதலே யென்ற வங்கள் காதலே யென்வி சாரம்
காதலே யென்றன் யோகங் காதலே யென்றன் போதம்
காதலே யென்றன் ஞானங் காதலே யெனக்கெல் லாமும். அ

தத்துவ விசாரத் தோடு தாரணை களையுங் கேளேன்
முத்தியென் றன்னேர் கோரும் மோஹமே யென்றும் வேண்டேன்
புத்தியென் றேற்ற முள்ள பரிவேது மறிய மாட்டேன்
பத்தியென் றுரைக்கு மந்தப் போதநா னிழந்து விட்டேன். கூ

விரகத்தால் வெந்த வென்னை வீக்ஷண்ய மொன்று செய்ய
வருகத்தான் வேண்டு மன்னுன் வாதேது மினியு மாமோ
முருகித்தா னழியா முன்னே முயங்கிநன் கணையா னுகில்
உருகித்தா னுகநான் சாத லுண்மையென் றுரைபோ நீயே. கo

அத்தியாயம் உரு

[பாங்கியின் பதிலுரை]

கன்னியே யின்னமுந்தான் காதலைநீ மறந்திலையோ
உன்னுடைய நிஜவுருவி லுறுகாதல் தானுமுண்டோ
சொன்னபெரு நன்மொழிகள் சுத்தமாய்த் தெளிவிலையோ
இன்னமுந்தா னென்சொல்வான் ஈசனே யாயினுந்தான். க

வேறு

உன்னுளுனை யாரா யென்று லுள்ளனவே நூல்க ளென்றாய்
அன்னவன்சொல் வாக்ய முந்தா னமுதாக நீகைக்கொள்ளாய்
உன்னுடைய வுருவி னுண்மை யுன்னாலே யோர்ந்தி டாமல்
அன்னியனு ரதனைக் காட்ட வாச்சரிய மிதனி லுண்டோ. உ

வேறு

ஆருயிரே யென்றோழி யல்லல்வாய்ப் பட்டனையே
கோருகின்ற தெதுதானுங் கோபத்தை மாற்றிச்சொல்
பாரிலுள்ள வெவருந்தாம் பரிஹஸிப்ப ருனைக்கண்டு
சீருடைய சீமாட்டி சிந்தித்துப் பாருண்மை. ௩

காதலருங் காதலென்றே கதறிநீ பதறுகிறாய்
காதலென்று லேதேதோ கனவிலுமே நானறியேன்
பாதகமே பயனளிக்கும் பைத்தியமேன் போற்றுகிறாய்
ஆதலினீ யறிவைக்கொண் டாராய்ந்திட் டமைதியுறு. ச

ஞானமொழி யெதுவுந்தான் நயமில்லை யுன்றனக்கேன்
ஞானமதை யடைவதற்கே ஞாலமெல்லாம் பாடுபடும்
ஞானந்தா னனைத்திற்கு நலமாகு முயர்செல்வம்
ஞானந்தா னுயிர்க்கெல்லாம் நல்லுயிரா யுறுங்கண்டாய். ரு

அத்தியாயம் உச

[தலைவி பதிலுரை]

தோழிநீ யினியெந் நாளுந் துயருற மொழிசொல் லாதே
வாழியே யுலக மெல்லாம் வழுவிலா ஞானம் பூண்டு
யாழின்முன் னெதுசு வைக்கு மிணையேதவ் வின்னி சைக்குப்
பாழன்றோ பாரி லெல்லாம் பண்புள்ள காத லின்றேல். க

வேறு

நானுமென் கணவனுமே நைந்துருகி யன்புறவே
ஞானந்தா னென்றுண்டோ நானீதா னங்கேது
மோனந்தான் பூண்பதெவர் மூச்சடக்கி நிற்பதெவர்
தேனுந்தான் பாலுந்தான் றெள்ளமுதுந் தான்றானே. உ

நானென்றி ருக்கவையோ ! நலிவுமிகக் காணுதடி
நானில்லா தேகரைய நாதனைச்சேர்ந் திடவேண்டும்
வானத்தி னின்பமழை வனப்புனலிற் பொழிந்ததென
மானேயென் னன்பனுக்கு மனமென்றைக் கிரங்கிடுமோ. ங

சிந்தையென்று யெண்ணமென்றுய் சிறிதுமவை யெனக்குண்டோ
விந்தையடி யுன்வாக்யம் வெற்றுடம்பி னியற்கையவை
இந்தவுடல் நானல்ல விதற்கேன்வீண் பாடெல்லாம்
எந்தவித மெனதுண்மை யென்றோநா னடைந்திடுவேன். ச

என்னுதை னென்கணவ னென்னன்ப னென்னின்பம்
என்செல்வ மெனதுதவ மென்கண்ணின் கருமணியை
என்காத லூற்றினிலே யென்றோநா னட்டிவைப்பேன்
தன்போதந் தானிழந்து தையலென்றே சேர்ந்திடுவேன். ரு

பெண்ணினமே யானாலும் பெரும்புத்தி வாய்த்தாலும்
கண்ணினுள்ள மணியேயாங் கணவன்மீ தினிற்காதல்
கொண்ணன்மை யறியாதாய் கூறுவதற் கியன்றிடுமோ
மண்ணதனிற் பிறந்தேநீ மாபயனை யேதறிந்தாய். சு

அழகம்மை சுந்தரரு மன்பாக வொன்றிடவே
மழலைமிகு சுதன்றன்னை மானிடர்க்காய்த் தந்ததெலாம்
தழன்மெழுகாய்த் தானுருகித் தானவனென் றறியாத
விழைவொடுசேர் விகற்பமிலா விரகக்கா தற்பயனே. எ

மலராதுதான் மணம்வீசும் மணமதனை யெவ்வாறு
நிலவரமாய் விவரிக்க நேரிடுமோ யாராலும்
சுலபமதா யுண்மோந்து சுவானுபவ மானாலே
அலதடியே யதன்மஹிமை யறிவுறுத்த யார்க்குந்தான். அ

வேதாந்த சாத்திரங்கள் வேணமட்டு நீயுரைத்தாய்
போதாதோ வினியுந்தான் போதமுமே யெனக்கில்லை
வாதேதுஞ் செய்யாது வரரமண னுண்மையுடன்
மாதேகே ளெனையணைய வருவதுண்டோ விந்நாளில். கூ

வருவானோ வாரானோ வாக்கொன்றே நோக்குகின்றேன்
தரியாம லென்னுயிருந் தாபத்தா லோடிவிடும்
தெரியாத வபலையடி தெய்வமே சாக்ஷியடி
விரிவாக வுரைத்திட்டு விரைவாக வந்திடுவாய். கய

அத்தியாயம் ௨௫

[பாங்கி பதிலுரைத்தல்]

செய்வதே யொன்றுந் தேரேன் ஸ்ரீரமண னிடமே சேர்ந்து
தெய்வநீ துணையா மென்று தெண்டநா னிடுவ தல்லால்
உய்வகை யாதுங் காணே னுனக்குறுங் காதல் தீர
மெய்வருந் திடுவ தல்லான் மேலுற்ற தெதுவு மோரேன். க

கடுந்தவ மியற்றிக் காமக் காட்டைத்தா னெரித்து நின்றே
இடுவது தனையேற் றுண்டிங் கேதுமே விரும்பா மௌனி
கொடும்பிணிக் காத லொன்றைக் கொஞ்சமு மறியா னையோ
விடந்தனைத் தள்ளல் போல வெறுப்புத்தா னவனுங் கொள்வான்.

உளமதில் விசாரத் தாலே யுன்னைநீ யாரா யாகிற்
பளபளா வுன்றன் பேச்சுப் பரிஹஸிப் பதுவே ஞாயம்
குளமதில் நீரைக் காட்டிக் குளித்திடென் றால்நீ வேண்டாய்
இளமையி னாலே யின்னு மிங்கித முனக்கொன் றில்லை. ௩

உரமதின் வலப்பா கத்தி லுண்முக மாக நோக்கிற்
பரமது பொருளே யொன்று பற்றறப் பிரகா சிக்கும்
உரமுட னதனை யென்று மூக்கமாய் விடாது பற்றித்
திரமதாய் நிற்கச் சொன்ன தீரன்சொல் லுறுதி தன்னை. ௪

எளிதிலே தள்ளி விட்டா யேனிந்த வாதந் தானே
சுளுவிதென் றெல்லோ ருந்தாஞ் சுகப்படப் பயில்கின் றாரே
பளுவதா யுனக்கேன் றோன்றும் பைத்தியக் காரி நீயும்
மளமள வென்று கண்ணீர் மாலையாய் வடிக்கின் றாயே. ௫

இடருறு நினைவு வந்தா லிழுத்திடுன் மூச்சைச் சற்றுத்
திடமதாய்க் கும்பித் தாலே தீர்ந்துபோ மதனின் சேஷ்டை
அடமது செய்தி டாதே யன்புட னுனக்குச் சொன்னேன்
மடமயி லனைய மாதே மையலை மாற்று முற்றும். ௯

அத்தியாயம் உசு

[தலைவியின் பதிலுரை]

பகர்ந்ததாஞ் சார மெல்லாம் பாங்கிநீ யுனக்கே கொள்ளு
நிகரிலா ஞானி யாவாய் நீசமாங் காதல் வேண்டாம்
சுகமுனி வரையே போலச் சுத்தமா மௌனி யாகி
இகமுள வுலகோர்க் கெல்லா மிதையெடுத் துரைநீ யம்மா. க

இயலதை மாற்ற வென்றும் யாராலு முடியா தன்றோ
துயருற லெனக்கே யின்பந் துன்பமு மெனக்கோ ரின்பம்
சுயநல மெனக்கோ வில்லை சுந்தர ரமணன் மீதில்
அயலற வாசை வைத்தே னதுசாலு மதுவே சாலும். உ

அவனென்மே லுபேட்சை செய்தா னுனலு மெனக்கே துக்கம்
எவருமே யென்றுன் பத்தை யேற்கவே துணையும் வேண்டேன்
புவிதனி லுள்ள மட்டும் புனிதனின் னினைவா லூறுஞ்
சுவைதனை யுண்டு மெத்தச் சுலபமா யுயிரைத் தீர்ப்பேன். ங

ரமணவென் றுரைக்கு நாமம் ராஜமந் திரமே யன்றோ
ரமணவென் றுள்ளத் தெண்ணல் ரஸமிகு கனியே யன்றோ
ரமணனென் கணவ னென்றால் ரமிக்கவே வேறென் றேனோ
ரமணனென் காதற் றேக்கில் ரமித்திடு ரஸிக னன்றோ. ச

மொட்டையே யடித்துக் கொண்ட முழுமௌனி யென்றே யெண்ணிக்
கட்டைபோற் கனிவே யில்லான் காதலே யறியா னென்று
சட்டையோர் சற்றுஞ் செய்யாய் சாற்றுவ தெல்லாங் காணில்
வெட்டவெள் வெளியா யுன்றன் வெறுமூடத் தனமே யாகும். ரு

வேறு

அன்பேதா னவனுருவ மன்பேதான் காதலுமே
அன்பொன்றே லேயன்றே வகிலமுந்தா னவனைமொய்த்தல்
அன்பதனைக் குறித்தன்றே வனந்தவித நிஷ்டைகளும்
அன்பில்லா விட்டாலோ வகிலந்தா னுயிர்ப்பதெவன். சு

வேறு

பலவகை நீர்க ளுண்டு பைங்கொடி செடிக ளுய்ய
நலமுள வன்பு நீரே நானுய்தற் கேது வாகும்
நிலமுள மற்ற நீரா னிமிடமென் னுயிர்நில் லாது
பலமதா மன்பு மீறப் பகர்ந்திடுங் காத லன்றே. எ

மணமுந்தா னெதுவா லும் மலரியன் மணமே யாமோ
உணும்பொரு ளெதுவா லு மூறுநற் சுனைநீ ராமோ
குணமது வெதுவா லுங் கோபமில் சாந்த மாமோ
எணமதி லெதுதான் ஞான மிலங்கினுங் காத லாமோ. அ

அவனியிற் பிறந்தோர்க் கெல்லா மழகுமக னந்த முண்டோ
புவிதனிற் பெண்ணெல் லோர்க்கும் பூரிக்குங் காத லுண்டோ
செவிதனிற் படுகி தங்கள் சீர்ஹரி குழலா கும்மோ
நவிலவே யாகா திந்த நைந்திடு காதற் றன்மை. கூ

அருளுடை ரமணன் றன்பா லன்புடை யவளே செல்வாய்
பொருளது தரவே றில்லை பொங்கிடு காத லல்லால்
மருளறு ஞானம் வேண்டேன் மற்றுள வெவையும் வேண்டேன்
திருவரு ளுண்மைக் காதற் றேக்கினி லாடச் சொல்லே. க0

அத்தியாயம் உஎ

[பாங்கி தலைவனிடம் முறையிடல்]

பைத்திய முற்றிப் போச்சே பாவைக்கே யென்ன செய்வேன்
வைத்திய மிதற்கு முண்டோ வையக மதனிற் றூனும்
வைத்திய நாதா போற்றி வாரிஜ நயனு போற்றி
சைத்திய வருணைக் காலிச் சமயநீ யவளைக் காப்பாய். க

அற்புத ஞான வாக்ய மனைத்துமே யுதறி விட்டாள்
சொற்பொழி வெல்லாம் வீணே சுகமுறச் செவியுட் கொள்ளாள்
பொற்பத மீதிற் காதல் பொருந்தியே வருந்து கின்றாள்
தற்சம யத்தி லுன் றன் றகுவிழை வொன்றே கோரி. உ

அன்புறு மொழியெல் லாமும் ஐயவுன் னுரையே யென்பாள்
இன்புறு பறவை பாட விதுதானுன் கீத மென்பாள்
கன்றுமேற் றூயுங் கொண்ட கனிவினைக் கண்ணுற் றாலோ
நன்றுடை ரமண னிந்த நையுமன் புருவே யென்பாள். ந

வேறு

நன்னிலத்திற் பசும்பயிரை நைந்துமிக முத்திடுவாள்
பொன்னிறநெற் கதிர்சாயப் பொலிவெல்லா முனதென்பாள்
புன்னைமரப் பூஞ்சோலை பூச்சொரிய மூச்செறிவாள்
கன்றலறத் தென்றலுறக் கணவனரு ளீதென்பாள். ச

தெள்ளியநீர்ப் பரப்பதனைத் தேவனென்றன் கணவனென்பாள்
துள்ளிவரு மடமானைத் தொடர்ந்தோடிச் சொக்கிடுவாள்
நள்ளிரவின் மீன்வான நம்ரமணன் பெருமையென்பாள்
தெள்ளமுதே யானுலுந் தெவிட்டுதெனத் தட்டிடுவாள். ரு

அன்புறுமோர் மொழிபோது மவளிதயங் கொள்ளைகொள
அன்புதா னெங்குளதோ வங்குள்ளான் ரமணனென்பாள்
அன்றுசொன்ன ஞானமதி லன்பேது மில்லையென்பாள்
அன்புருவா மவள்தன்னை யையநீ யணைவதென்றோ. ௬

காதலினாற் கரைந்துருகுங் கற்கண்டுச் சுவையாளை
ஏதின்ன மின்புரு தேங்கவிட்டா யிதுதகுமோ
வாதேதுஞ் செய்யாது வரவேதான் வேண்டுமிப்போ
தேதுண்மை யுருவாமோ வெதுநிஜமோ வதுவாகி. ௭

ரஸமாகி ரஸிகனுமாய் ரமித்திடுநல் ரமணனுமாய்
அஸமான வானந்த வாத்மாபி ராமனுமாய்
கிஸலயதற் பம்போன்ற கிளிமொழியா ளிதயத்தில்
வஸித்திருநீ யெப்போதும் வரகுணனே வந்துடனே. ௮

அத்தியாயம் உஅ

[தலைவன் அருளுரை]

பாங்கியே நீயா னாலும் பரிவினி லன்னை யேதான்
தீங்கனிச் சுவைசேர் வாக்காற் றெரிவித்தா யவளி யல்லை
ஈங்கிருந் தங்கு நானு மெழுந்தோடி வருவ தற்குத்
தாங்கிடு முடலே யேது தத்துவ வுருவன் றோநான். க

சார்ந்தவர் தங்கண் மீதிற் சத்திய முண்டெ னன்பு
பேர்ந்தவர் தம்மை யென்றும் பிரிந்திடேன் பயமும் வேண்டாம்
ஆர்ந்தமர் காத லொன்றே யனிசமு மென்ற னுண்மை
சேர்ந்தேனென் றவட்கு நீபோய்ச் சேதியும் விரைவிற் சொல்வாய்.

ஏக்கங்கள் சிறிதும் வேண்டா மென்றுமே சங்கை வேண்டாம்
போக்கேது மில்லா தான போகமே யல்லா லொன்று
நீக்கமே யேது மில்லை நிர்மலா னந்த போகம்
நாக்கினு னவில வொண்ணு நற்சொரூ பானு பூதி. ந

காதலா ஆறு மின்பு கள்ளமில் நானே தானும்
காதல்தான் க்ரமகா லத்திற் கருதுஞா னியர்க்கே யூறும்
காதலா ஆறு மின்பே கடைநிலை கடந்த வர்க்கும்
காதலின் புக்கு மேலாய்க் கருதவே யேது மில்லை. ச

ஆதலால் நீசென் றேயங் கவளிட முண்மை சொல்லு
காதலா ஆறு மின்பே காதலி யுருவி னுண்மை
போதலே யென்று மில்லாப் போதத்தோ டவளு நானும்
பேதமே யில்லா தொன்றிப் பிறிவற நன்கு வாழ்வோம். ரு

அத்தியாயம் உகூ

[பாங்கி அதிசயித்தல்]

அதிசயமீ ததிசயமே யன்பின் மிகுபெருமை
மதிகொண்டு கித்திடினும் மனத்தினையே வாட்டிடினும்
புதியதுவாங் கெரடிவித்தை போலாகு மேயல்லால்
இதயத்தில் வளர்காதற் கிணையாமோ விவையெல்லாம். க

அரிதாமிக் காதலுமே யார்க்குந்தா னூறிடுமோ
விரியிதயக் காதன்மணம் வெறுங்கல்லிற் கேறிடுமோ
சரியிதனுக் கிவ்வுலகிற் சாத்திரந்தா னேதுசொல்லும்
நரியுந்தான் சிங்கம்போ னடித்திடினு நரியேதான். உ

மின்மினியு மழகாக மின்னினுமே நிலவாமோ
கன்மனமுங் கரையாத கடுநிஷ்டை யாதுபயன்
உன்னலோ டுசாவுதலு முழைப்புவீ ணுவகையின்றேல்
அன்னவன்பொற் பாதத்தி லனவரத மன்பேமேல். ௩

காதலரும் பலராத கன்னெஞ்சம் வன்னெஞ்சே
வேதமெலா மோதிடினும் வேள்விபல வியற்றிடினும்
நாதனிடம் வைத்துள்ள நல்லன்பு வளர்ந்துகரை
மோதலுறுங் கடலலைபோன் மோதிடலே முதந்ததும்பும். ச

கள்ளமிலாக் கன்னியவள் காதலதே யியல்பானள்
வெள்ளமதா யின்பூற்றை விரகத்தோ டவற்கீந்தாள்
தள்ளுவனே வெள்ளளவுந் தயையுடனே தானணைந்தான்
விள்ளலிலா வுண்மையுரு விகற்பமிலா தொன்றிடவே. ரு

எத்தனையோ மூச்சடக்கி யிடுக்கண்க ளைப்பொறுத்து
நித்தமுந்தா னருந்தவமே நெடுங்கால முயன்றாலும்
இத்தன்மைக் காதலுட னிந்நிமிட மேயணையும்
அத்தனுடை யருளுவந்தே யார்ந்திடுத லரிதரிதே. ௬

ஞானத்தை நூல்களினுன் ஞாலத்தோ ரடைவதெனில்
தேனைப்போற் பருகவதைத் தேடித் திரிவதெவன்
வானத்தின் மழையுண்டு வந்திடுமோ வெகுசுளுவாய்
தானத்தா ராளத்தார் தகுமிடமே தருவரன்றோ. ௭

ஈதெல்லா மேதுபய னேதுக்காஞ் சாதனைகள்
மோதிக்கொண் டலைபுரளும் மோதக் கடலதனில்
ஏதுக்கு மஞ்சாம லிறங்கிடிலே யாகுமிது
வாதுக்கள் பலசெய்து வறண்மேட்டில் நிற்பதுவீண். ௮

பொற்பதத்தி லனவரதம் பொங்கிவரு மன்புகொண்டு
நற்பருவஞ் சேர்மங்கை நாதனையே நைந்துநைந்து
சொற்பனத்து மவன்நினைவாற் சூதில்லாக் காதலிலே
உற்பவமா மவ்வின்ப மொன்றினதே யுண்மையிது. ௯

அத்தியாயம் ௩௦

[பாங்கி தலைவிக் குரைத்தல்]

அன்பின் முளைத்தவளே யங்நீராற் செழித்தவளே
இன்பொன்றே யினியென்று மின்னலிலை யுன்றனக்கே
உன்பங்கிற் றுன்ரமண னுளனுள்ளான் விடுசங்கை
என்பாங்கித் தூதுந்தா னின்றைக்கே யுய்ந்ததுவே.

உன்முறையைச் செவியுற்றா னுவகையுமே யுட்கொண்டான்
இன்பந்தா னவனோக்கி லிலங்கியதே யீதுண்மை
சன்மந்தா னுன்சன்மஞ் சாபல்ய மானதடி
துன்பந்தா னினியேது தூரத்தள் ளடிமானே.

ஆருயிரே யென்கண்ணே யபரஞ்சி தக்கொடியே
ஓருருவே யாயுள்ளா னுன்னன்பே வடிவானான்
சீருள்ள வின்புருவாய்ச் சேர்ந்தணைந்தே னெனச்சொன்னான்
ஆருள்ளா ருன்பெருமை யறிந்ததனை மொழிந்திடவே.

அவனற்று நீயற்றே யன்புருவாய்க் கலந்தின்பாய்
அவனுன்னைச் சேர்ந்தேனென் றப்போதே வாக்களித்தான்
நவ!நவயௌவனமாக நானுளு மொன்றிட்டுச்
சிவயோக போகமதிற் சிவமயமாய்ச் சீராவாய்.

அடியேயென் கண்மணியே யவனணைந்த சுகத்தியலை
எடுத்துரையாய் சிறிதேனு மென்கனுள மெய்யன்பால்
படிப்படியாய் நானுமந்தப் பைங்காதல் நன்குணரும்
படிக்கெனையுங் கூட்டிடுநீ பைங்கிளியே யென்னன்பே. ௫

தொடுத்துள்ள காதலதைத் தோகைநீ யறிந்தவெவன்
தடித்துள்ள வென்மனமுந் தரித்திடுமோ வவ்வணியை
மடிக்குள்ளே மூடிவைத்த மாம்பழத்தைப் போலெனக்குப்
பிடித்திடவே பகர்ந்திடுவாய் பேய்போல்வே ணுஹும். ௬

அத்தியாயம் ௩௧

[தலைவியின் மனச்சாந்தி]

கைம்மாறென் செயவுளது கண்ணானை வென்றோழி
அம்மாவுன் னருந்தூதா லன்பனெனை வந்தணைந்தான்
சும்மாநன் கிருப்பதல்லாற் சொல்லவுமே யியலாது
பெம்மானென் ரமணன்மேற் பேராசை பலித்ததடி. ௧

சந்தடிகள் செய்யாதே சாந்தனுமே சற்றயர்ந்தான்
இந்தமுறை யுன்றனக்கா யிறுதியதாய் வெளிவந்தேன்
சொந்தமுள கணவனருஞ் சுகானுபவ மெங்கேனும்
எந்தபந்து வானாலு மியம்புவரோ நாணிகந்தே. ௨

ஒன்றுண்மை சொல்கின்றே னுள்ளன்பே யவனுருவம்
நன்றென்று மவ்வன்பா னதனையாம் பேணிடுதல்
முன்வள்ளல் விநாயகன்றன் மூர்த்தமதாம் வெல்லமதை
முன்கிள்ளி யவனுக்கே முன்பிடுநை வேத்தியமாம். ௩

விவரித்திங் கதையுரைக்க வெகுநேர மாகுமடி
புவனத்திற் பள்ளிகொண்ட பரமேஷ்டிக் குளமேதோ
பவனத்திற் சென்றங்கு புண்ணியமே வடிவாகிச்
சிவசத்திற் றான்கலந்த சீரன்னை யழகைக்கேள். ௪

அதுவுந்தான் போதாதே லபிராமன் சதியைக்கேள்
மதுவுண்ட வண்டினம்போன் மாண்புள்ளார் மண்ணுலகில்
நிதமுந்தா முறைகின்றார் நேசமுட னவரைக்கேள்
விதமெல்லாங் கரைகண்டு விகஸிக்கும் ராஜமுளாள். ௫

வாழி

உலகெல்லா மினிதுறவே யுய்ந்துநெடு நாள்வாழி
குலமங்கை யெல்லோருங் குணமோங்க மிகவாழி
தலைவன்ஸ்ரீ ரமணன்றன் ருள்வாழி யன்பருடன்
கலையிலெல்லா மேலாமிக் காதல்நூல் தான்வாழி. கா

ஆக அத்தியாயம் ௰க-க்கு
விருத்தம் உகக

ஓம் தத் ஸத்

श्री रमणार्पणमस्तु